# 17-07-2024 செய்தி

## உச்சநீதிமன்ற நீதிபதிகள்

- சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி ஆர்.மகாதேவன், ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி என்.கோடீஸ்வர் சிங் ஆகியோர் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர்.
- மணிப்பூரைச் சேர்ந்தவரான என்.கோடீஸ்வர் சிங், அந்த மாநிலத்தில் இருந்து உச்சநீதிமன்றத்துக்கு நியமிக்கப்பட்ட முதல் நீதிபதி என்ற சிறப்பை பெற்றுள்ளார்.
- சென்னை உயர்நீதிமன்ற புதிய பொறுப்பு தலைமை நீதிபதியாக டி.கிருஷ்ணகுமார்.

## இந்தியாவில் ஒரு தடுப்பூசி கூட பெறாத 16 லட்சம் குழந்தைகள்!

- கொரோனா பாதிப்பு காரணமாக உலகம் முழுவதும் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துவது தடைப்பட்டிருந்த நிலையில், இந்தியாவில் 2023-இல் சுமார் 16 லட்சம் குழந்தைகளுக்கு எந்தவொரு தடுப்பூசியும் செலுத்தப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.
- இதன்மூலம், அதிக குழந்தைகளுக்கு எந்தவொரு தடுப்பூசியும் செலுத்தாத மோசமான நாடுகளின் பட்டியலில் நைஜீரியாவுக்கு அடுத்த இரண்டாம் இடத்தில் இந்தியா உள்ளது.
- நைஜீரியாவில் எந்தவொரு தடுப்பூசியும் செலுத்தாத குழந்தைகளின் எண்ணிக்கை 21 லட்சமாகும்.
- உலக சுகாதார அமைப்பு மற்றும் யூனிசெஃப் இணைந்து திங்கள் கிழமை வெளியிட்ட தரவுகளின் மூலம் இத் தகவல்கள் தெரியவந்துள்ளன.
- இந்தப் பட்டியலில் இந்தியாவுக்கு அடுத்து எத்தியோப்பியா, காங்கோ, சூடான், இந்தோனேசியா ஆகிய நாடுகள் உள்ளன.
- முதல் 20 நாடுகளின் பட்டியலில் சீனா 18-ஆவது இடத்திலும் பாகிஸ்தான் 10-ஆவது இடத்திலும் உள்ளன.
- 8 சார்க் கூட்டமைப்பு நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.